# அமர்ந்த தண்ணீர்



சகோ. J. சாம் ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# அமர்ந்த தண்ணீர்!

(STILL WATER)

A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006.
Tamil Nadu

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024

முதற் பதிப்பு : செப்டம்பர் 1989
இரண்டாம் பதிப்பு : ஜூலை 1991
மூன்றும் பதிப்பு : மார்ச் 1993
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 146

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024

# அர்ப்பணம்

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்;
நான் தாழ்ச்சியடையேன்
அவர் என்னைப் புல்லுள்ள
இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீர்களண்டையில்
கொண்டுபோய் விடுகிறார்'' (சங்கீதம் 23:1,2).
என் மேய்ப்பரும் மீட்பருமான
என் அருமை **இயேசுவுக்கே**
இந்நூல் அர்ப்பணம்!

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அமர்ந்த தண்ணீர்! | 5 |
| 2. | கலங்காதிருங்கள்! | 9 |
| 3. | மகிழ்ச்சியாயிருங்கள்! | 12 |
| 4. | உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்கள்! | 15 |
| 5. | பெலனடைவீர்கள்! | 18 |
| 6. | பரிசுத்தம்! | 21 |
| 7. | பரிசுத்தமில்லாமல்! | 24 |
| 8. | பரிசுத்தத்தை காத்துக்கொள்! | 27 |
| 9. | நீர் வளம்! | 30 |
| 10. | கர்த்தரையே! | 33 |
| 11. | பவுலின் தீர்மானம்! | 36 |
| 12. | உறுதியான மனம்! | 39 |
| 13. | உள்ளிந்திரியங்கள்! | 42 |
| 14. | எழும்பிப் பிரகாசி! | 45 |
| 15. | உங்களோடு இருப்பேன்! | 48 |
| 16. | என் ஆத்தும நேசரே! | 51 |
| 17. | நேசத்தின் உச்சிதங்கள்! | 54 |
| 18. | வழுவாது காப்பவர்! | 57 |
| 19. | நிலை நிறுத்துவார்! | 60 |

# அமர்ந்த தண்ணீர்!

''அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய்விடுகிறார்'' (சங் 23:2).

கர்த்தருடைய சமுகத்தில் போய் அமரும்போது நம்முடைய உள்ளக் கலக்கங்கள் வேதனைகள் எல்லாம் அமர்ந்துபோய் விடுகிறது! கர்த்தர் நம்மை ஆற்றித் தேற்றுகிறார்!

மட்டுமல்ல, கர்த்தர் நம்மை அன்போடுகூட அமர்ந்த தண்ணீராகிய பரிசுத்த ஆவியின் நிறைவுக்குள் நடத்திச் சென்று, நம்முடைய உள்ளத்தை தெய்வீக பரிபூரணத்தினால் நிரப்பி ஆசீர்வதிக்கிறார். அல்லேலூயா!

எனக்கு ஒரு சகோதரனைத் தெரியும். அவர் என்னிடத்தில் பேசும்போது, ''சகோதரனே, என்னுடைய உள்ளத்தில் துக்கங்கள் சூழ்ந்துகொள்ளும்போது நான் மனுஷரண்டை ஓடாமல் எப்பொழுதும் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஓடிப்போய் அங்குள்ள ஆல்டர் முன்பாக அமர்ந்துவிடுவேன். என்னுடைய இருதயத்தின் வேதனைகளையெல்லாம் கண்ணீராக்கி கர்த்தருடைய பாதத்தில் ஊற்றுவேன். கொஞ்ச நேரத்திற்குள்ளெல்லாம் தெய்வீக சமாதானம் என்னை ஆட்கொள்ளும். தெய்வீக பிரசன்னத்தோடும் வல்லமையோடும் சமாதானத்தோடும் அந்த இடத்திலிருந்து எழும்பி வருவேன்'' என்றார்.

எனக்கு ஒரு வயதான தாயை தெரியும். அவர்களுடைய வாழ்க்கையிலே பிரச்சனைகளும் பாடுகளும் கலக்கங்களும் வரும்போது நேராக தன்னுடைய அறைக்கு போய் கதவை தாளிட்டுகொள்ளுவார்கள். அவர்கள் அங்கே அழு

வார்களோ அல்லது தன் இருதயத்தை ஊற்றுவார்களோ ஜெபிப்பார்களோ தெரியாது. ஆனால் அந்த அறையை விட்டு வெளியே வரும்போது பூரண சமாதானத்தோடும் தெய்வீக பிரசன்னத்தோடும் வருவார்கள்.

கர்த்தர் நம்முடைய மேய்ப்பராய் இருக்கும்போது, நாம் கலங்கவேண்டிய அவசியமே இல்லை; சஞ்சலப் பட வேண்டிய தேவையே இல்லை! நம்முடைய பிரச்சனையை யெல்லாம் கர்த்தர்மேல் வைத்துவிட்டு அமர்ந்து ஆறு தலைப் பெற்றுக்கொள்ளலாம்!

கலங்கிய தண்ணீரை ஒருபோதும் ஆடுகள் விரும்புவ தில்லை. சேறும் சகதியுமாக தண்ணீர் கலங்கி இருந்தால், ஆடுகள் அதில் வாய் வைத்து உறிஞ்சுவதில்லை. ஆடு சுத்த மான பிராணி ஆனதால் சுத்தமான தண்ணீரையே விரும் புகிறது. அமர்ந்த தண்ணீரே அதற்கு அலாதி விருப்பம்.

கலங்கிய உள்ளத்தோடு கவலையோடு வாழ யாருக்குத் தான் விருப்பம் உண்டு? போராட்ட நிலைமையோடு பதட் டத்தோடு யாரும் வாழ விருப்பப்படமாட்டார்கள். தேவ பிள்ளையே, நீ மன அமைதியும், உள்ளத்தின் ஆழத்தில் சமாதானமும் பெறவேண்டுமென்றால் இயேசுவண்டை வா. அவர் அமர்ந்த தண்ணீராகிய பரிசுத்த ஆவியான வரிடம் உன்னை அருமையாய் வழி நடத்துவார். "தேவனு டைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியிலுலுண்டாகும் சந்தோஷ முமாயிருக்கிறது" (ரோமர் 14:17).

சமாதானமான உள்ளத்தை ஓவியமாக வரைய விரும் பிய ஓவியன் ஒருவன், கொந்தளிக்கும் கடலின் மத்தி யிலே ஒரு உயர்ந்த கற்பாறையை வரைந்தான். பெரிய பயங்கரமான அலைகள் அந்த பாறையின்மேல் மோதி அடித்தன. மின்னல் ஒளி வீசியது. கடலோ கொந்தளித்துக் கொண்டே இருந்தது.

ஆனால் அந்த பெரிய பாறையின் உச்சியில் உள்ள பிளவில் ஒரு புறா மிக அமைதியாய் ஒன்றுக்கும் கலங்காமல் கெம்பீரமாய் அமர்ந்து இனிமையான குரலில் சமாதானமாக கூவிக்கொண்டிருந்தது. ஆம், வெற்றியான கிறிஸ்தவ வாழ்க்கையின் ரகசியம் இதுதான்!

நம்மைச் சூழ கலக்கங்கள், போராட்டங்கள், சண்டைகள், எண்ணற்ற பிரச்சனைகள், நமக்கு விரோதமாக வரலாம். ஆனால் நாமோ கிறிஸ்துவுக்குள் சமாதானமாய் இருக்கிறோம். இயேசு சொன்னார், ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக'' (யோவான் 14:1,27).

தேவபிள்ளையே, அமர்ந்த தண்ணீரண்டைக்கு வா. கர்த்தர் உன் மேய்ப்பராய் இருப்பாரென்றால், எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப் 4:7).

அமர்ந்த தண்ணீரின் அனுபவம் ஒரு இனிமையான அனுபவம். தேவனுடைய பிள்ளைகள் அந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். ''நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்'' (சங் 46:10) என்று வேதம் போதிக்கிறது! நாம் தேவ சமூகத்தில் அமர்ந்திருப்போமென்றால், கர்த்தருடைய ஆளுகையையும், நடத்துதலையும் ஏற்றுக் கொள்கிறோம் என்பதுதான் அர்த்தம். நாம் அமர்ந்திருக்கிறோம் என்றால் கர்த்தர் நமக்காக யுத்தம் செய்ய இடம் கொடுக்கிறோம் என்று அர்த்தம்.

இது ஒரு பெரிய ரகசியம். அன்று மோசே இந்த ரகசியத்தை இஸ்ரவேலருக்கு கற்றுக் கொடுத்தார்.

''கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்'' (யாத் 14:14). அவர் செங்கடலை இரண்டாக பிரிப்பார்; பார்வோனையும் அவன் சேனைகளையும் சிவந்த சமுத்திரத்திற்குள் தள்ளுவார்; யோர்தானை பின்னிட்டு திரும்பப் பண்ணுவார்; எரிகோவின் மதில்களை இடிந்து விழும்படிச் செய்வார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருப்பதுதான்!

சீஷர்கள் ஒரு முறை கடலில் பயணம் செய்தபோது, பலத்த சுழற்காற்று உண்டாகி அலைகள் படகின் மேல் மோதிற்று. சீஷர்கள் அதைக் கண்டு கலங்கி இயேசுவை எழுப்பினார்கள். அவர் எழும்பி காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய் மிகுந்த அமைதலுண்டாயிற்று (மாற்கு 4:39).

தேவபிள்ளையே, அந்த மிக வல்லமையுள்ள தேவன் உங்களை அமர்ந்த தண்ணீர்களண்டையில் வழி நடத்திச் செல்லுகிறவர் என்பதை மறந்து போகாதே.

ஓடும் தண்ணீரை அணை போட்டுத் தடுத்து நிறுத்தி அமைதலாக்கி ஆடுகளுக்குத் தருகிறான் நல்ல மேய்ப்பன். ஆனால் நமக்கோ அலைகடலை அமர்த்தி அமைதலாக்கி, நாம் அதின் மேல் நடந்து செல்ல நம் பாதபடியாக்கித் தருகிறார் நம் பிரதான மேய்ப்பன்! அல்லேலூயா!

''கடல் கொந்தளித்துப் பொங்கி
கப்பல் ஆழ்ந்து போகையில்
இயேசுவே நீர் எங்களுடன்
கப்பலோட்டியாயிரும்...''

# கலங்காதிருங்கள்!

''ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்கு சொல்லுகிறார். இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது''
(II நாளா 20:15).

நமக்கு விரோதமாக அநேகர் எழும்பி வரும்போது நம்முடைய உள்ளம் கலங்குவது இயற்கை! உள்ளம் தவிப்பது இயல்பு! மனம் சோர்ந்து போவது வாடிக்கை!

அதே நேரத்தில் எந்த ஒரு மனிதன் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறானோ, அவன் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்து, கர்த்தருக்குள் அவனை திடப்படுத்திக் கொள்கிறான். விசுவாச வீரனாய் ஜெயங்கொள்கிறான்.

தேவபிள்ளையே, இன்று சற்று ஆராய்ந்து உனக்கு விரோதமாக எழும்பியிருக்கிற மனுஷன் யார்? தீய சக்திகள் எவை? அவதூறாய்ப் பேசும் நாவுகள் எது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து அதையெல்லாம் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுப்பாயாக!

''பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள்'' என்று கர்த்தர் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறார்.

அன்று இஸ்ரவேல் ஜனங்களை நிர்மூலமாக்க பார்வோனின் சேனைகள் புறப்பட்டு வந்தன. இஸ்ரவேல் ஜனங்கள் என்ன செய்வார்கள் பாவம்?

முன்னால் சிவந்த சமுத்திரம், இரண்டு புறமும் பெரிய மலைகள், பின்னாலோ பயங்கரமான பார்வோனின் இரதங்கள், சேனைகள், குதிரைகள் நின்று கொண்டிருந்தன. எல்லாப் பக்கமும் நெருக்கம், தப்ப முடியாத சூழ்நிலை!

அப்போது மோசே, இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து சொன்னது என்ன தெரியுமா? ''பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்'' (யாத் 14:13,14).

கர்த்தர் தாம் சொன்னபடியே வெற்றி சிறந்தார். சிவந்த சமுத்திரத்தில் வழி திறந்து இஸ்ரவேலரை நடத்தினார். பார்வோனின் சேனைகளை சிவந்த சமுத்திரத்தில் தள்ளி அமிழ்த்தி அழித்தார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக மோவாபியரும் ஏகமாய் யுத்தத்திற்கு புறப்பட்டு வந்தபோது, உள்ளம் கலங்கின ராஜாவாகிய யோசபாத் கர்த்தரை தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு யூதாவெங்கும் உபதேசத்தை கூறுவித்தான்.

அப்போது கர்த்தர் சொன்ன வார்த்தை இதுதான். ''நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. நீங்கள் நின்றுகொண்டு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பை பாருங்கள். பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். கர்த்தர் உங்களோடேகூட இருக்கிறார்'' (II நாளா 20:15-17).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னோடுகூட இருக்கிறார் என்கிற விசுவாசம் உன்னில் இருக்கும்போது நீ எதைக் குறித்தும் கலங்கவேண்டியது இல்லை. பயப்படவேண்டியதும் இல்லை. உனக்கு விரோதமாக ஒரு பாளயம் எழும்பினாலும் நீ சேதப்படுவதில்லை. கர்த்தர் உன்னோடுகூட இருக்கிறார்.

இன்றைக்கும் தேவனுடைய ஜனங்களுக்கு விரோதமாக வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் எழும்பி போராடுகின்றன. கொடுமையான மனுஷர் சீறுகிறார்கள். குறுக்கு வழியில் பொல்லாத ஞானத்தினால் நம்மை விழச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

ஆனால், வெற்றி சிறப்பதோ கர்த்தர்தான். நம்முடைய பாரத்தை நம்முடைய கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிட்டு அவர் நமக்காக யுத்தம் செய்ய ஒப்புக் கொடுக்கும்போது நிச்சயமாகவே கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார்.

தாவீது ராஜா சொல்லுகிறார்: ''தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்''

(சங் 46:1-3).

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் (சங் 46:11). ஆமென்; அல்லேலூயா!

தேவபிள்ளையே, கலங்காதே! கர்த்தர் உனக்காக வழக்காடுவார்! கர்த்தர் உனக்காக யுத்தம் செய்வார்! கர்த்தர் உனக்காக யாவையும் செய்து முடிப்பார்! உனக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!

# மகிழ்ச்சியாயிருங்கள்!

''மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்'' (பிர 3:12).

''மகிழ்ச்சியாயிருங்கள்'' என்ற கட்டளை வேதத்தில் பல இடங்களில் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் அதற்கு ஒப்பாக ''கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்'' (பிலி 4:4) என்று எழுதுகிறார்.

இந்த வசனத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். ''எப்படியும் சந்தோஷமாயிருந்து கொள்ளுங்கள்'' என்று தேவன் உத்தரவு கொடுக்கவில்லை. ''கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்'' என்பதே அவர் நமக்குக் கொடுக்கிற ஆலோசனை.

கர்த்தருக்குள் இல்லாமல் உலகப்பிரகாரமான நாடகங்களிலும், சினிமாக்களிலும், கேளிக்கைகளிலும் சந்தோஷமாயிருப்பதை வேதம் நமக்கு அனுமதிப்பதேயில்லை. அவைகளெல்லாம் பாவ சந்தோஷம். அற்பமான அவைகள் பாதாளத்திற்கு நம்மை இழுத்துச் செல்லுகிறவைகள்.

அதே நேரம் கர்த்தருக்குள் நமக்கு ஒரு பெரிய சந்தோஷம் உண்டு. கர்த்தரைப் பாடி, ஆடி துதிக்கும்போது அந்த சந்தோஷம் நம் இருதயத்தையெல்லாம் நிரப்புகிறது.

கர்த்தரில் களிகூர்ந்து மகிழும்போது உலகம் கொடுக்கவும் எடுக்கவும் கூடாததுமான பெரிய சமாதானம் நம்முடைய இருதயத்தையெல்லாம் நிரப்புகிறது.

தாவீது ராஜா தன்னுடைய சந்தோஷத்தின் இருப்பிடமாக கர்த்தருடைய சமுகத்தையே தெரிந்து கொண்டார். "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங் 16:11).

அப்படியே உடன்படிக்கைப் பெட்டி தாவீதின் நகரத்திற்குள் வந்தபோது அங்கே கர்த்தருடைய சமுகத்தையும் பிரசன்னத்தையும் அதிகமாக உணர்ந்தபடியினால் சந்தோஷத்தால் நிறைந்து நடனமாடி துதித்து மகிழ்ந்தார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, தேவனுடைய சமுகம் நமக்கு சந்தோஷமானது. அந்த சமுகத்தின் இனிமையான பிரசன்னம் நம்மை நிரப்பி நம்முடைய இருதயத்தைப் பொங்கி வழியச் செய்கிறது.

மட்டுமல்ல, தேவன் நமக்குத் தருகிற இரட்சிப்பும் நமக்கு பெரிய சந்தோஷமாயிருக்கிறது. அந்த சந்தோஷம் சொல்லி முடியாத மகிமையான சந்தோஷம்!

இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது, "சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்" என்று I பேதுரு 1:8,9 வசனங்களில் எழுதுகிறார்.

ஆம், பாவங்கள் மன்னிக்கப்படும்போது, பாவசுமை நீங்கும்போது, பாதாளத்திலிருந்து விடுதலையாகும்போது நம் உள்ளம் மகிழ்ந்து களிகூருகிறது. அல்லேலூயா!

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலும் நம் உள்ளம் சந்தோஷத்தால் நிரம்பி வழிகிறது. வேதம் சொல்கிறது: "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" (ரோமர் 14:17).

நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்பொழுது தேவனுடைய அன்பு நம்முடைய இருதயத்தில் ஊற்றப் படுகிறபடியால் நம் உள்ளம் மகிழ்ந்து பரவசமடைகிறது. உன்னத பெலத்தினால் நாம் நிரப்பப்படுகிறபடியினால் நாம் களிகூர்ந்து மகிழுகிறோம் (அப் 1:8).

மட்டுமல்ல, அந்த ஆவியானவர் நம்மை சகல சத்தி யத்திற்குள்ளும் நம்மை வழி நடத்துகிறபடியால் நம்மு டைய சந்தோஷம் நிரம்பினதாயிருக்கிறது
(யோவான் 16:13).

''கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்'' (ஏசாயா 35:10).

# உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்கள்!

"அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே 1:3).

பழைய ஏற்பாட்டில், ஆபிரகாமுக்குள் இஸ்ரவேலர் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஆபிரகாமுக்குள் இஸ்ரவேலருக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள், வாக்குத்தத்தங்கள் எல்லாம் பெரும்பாலும் இம்மைக்குரியதாகவும், பூமிக்குரியதுமாகவே இருந்தது. ஆனால் கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதங்கள் இம்மைக்கும், மறுமைக்கும், உன்னதத்திற்கும், நித்தியத்திற்குமுரிய ஆசீர்வாதங்களாய் இருக்கிறது. அல்லேலூயா!

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, நோவா போன்றவர்கள் எல்லாம் மிகப்பெரிய செல்வச் சீமான்களாய் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு திரளான ஐசுவரியமும், உலகத்தின் மேன்மையும் இருந்தது (ஆதி *30:27; 39:5;* நீதி *10:22*).

ஆனால் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் ஆவியின் வரங்களும், ஆவியின் வல்லமையும், ஆவியின் பெலனுமே பெரிய ஆசீர்வாதங்களாய் இருந்தன. அதுவே அவர்களின் ஐசுவரியம், அதுவே அவர்களது மகிமை!

இயேசு தன்னுடைய சீஷர்களை பெத்தானியா வரைக்கும் அழைத்துக் கொண்டுபோய் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். ஆசீர்வதித்த நிலை

மையிலே அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டார். பத்து நாட்களுக்குப் பிறகு அங்கேயிருந்து ஒரு மிகப் பெரிய ஆசீர்வாதத்தை அனுப்பினார். அதுவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்.

வேதம் சொல்கிறது: ''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'' (அப் 2:4).

''அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப் பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்'' (அப் 2:33).

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் ஏராளம், ஏராளம்! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலே தேவனுடைய அன்பு நம் இருதயத்தில் ஊற்றப்படுகிறது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலே ஒரு பெரிய சமாதானம், பெரிய சந்தோஷம் நமக்குள்ளே வருகிறது
(ரோமர் 14:17).

பரிசுத்த ஆவியிலே உன்னத பெலன் இருக்கிறது. பரலோகத்தின் வல்லமை இருக்கிறது. அது நம்மை பொங்கி வழியச் செய்கிறது. பரிசுத்த ஆவியிலே திரித்துவத்தின் தேவன் இணைந்திருக்கிறார்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது ஆவிக்குரிய வரங்களையும் நாம் பெற்றுக் கொள்கிறோம். வேதம் சொல்கிறது: ''ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.''

எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வெறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி 12:7-11).

ஆவியின் வரங்கள் மாத்திரமல்ல, ஆவியின் கனிகளும், பரிசுத்த ஆவியின் வல்லமையும் நமக்குக் கிடைக்கிறது.

"அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்" (ஆதி 49:25).

# பெலனடைவீர்கள்!

''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப் 1:8).

நீங்கள் பெலனடைவீர்கள்! பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நிச்சயமாகவே நீங்கள் பெலனடைவீர்கள்! அல்லேலூயா!

இந்தப் பெலன் வெளியரங்கமாய் பார்க்கக்கூடிய ஒரு பெலன் அல்ல. போர்ன்விட்டா, ஹார்லிக்ஸ், உடற் பயிற்சி என்பவைகளில் ஏற்படுகிற சரீர பெலன் அல்ல!

இது நமது ஆவியிலே ஆத்துமாவிலே தேவன் கொடுக்கும் பரம பெலனாகும்! இந்த பெலனைக் குறித்து வேதம், ''உன்னத பெலன்'' என்று வர்ணிக்கிறது.

''நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' என்று கர்த்தர் தம்முடைய சிஷர்களிடத்தில் சொன்னார். அப்படியே அவர்கள் எருசலேமில் மேல் வீட்டறையில் தங்கியிருந்து பரிசுத்த ஆவியாகிய உன்னத பெலத்தினால் நிரப்பப்பட்டார்கள் (லூக்கா 24:49).

ஒருமுறை நான் இலங்கையில் ஊழியம் செய்தபோது பிசாசு பிடித்த ஒரு வாலிபனைச் சந்தித்தேன். ஏற்கெனவே அவன் பெரிய ரவுடி, அதிலும் பெலமுள்ள பயங்கரமான பிசாசுகள் அவனைப் பிடித்திருந்ததினால் அவன் இன்னும் அதிகமான பெலனுள்ளவனாய் இருந்தான்.

அவனை யாராலும் அடக்க முடியவில்லை. புத்த பிக்ஷுகளிடம் அவனைக் கொண்டு போனபோது அவனுக்கா அவர்கள் எவ்வளவோ மந்திர சிகிச்சைகள் எல்லா

செய்து பார்த்தார்கள். ஆனால் அவனோ எழுந்து அந்த புத்த துறவிகளையெல்லாம் அடித்து நொறுக்கி விட்டான்.

கடைசியாக அவனை கிறிஸ்தவ ஆலயத்திற்கு கொண்டு வந்தார்கள். அவனுடைய அருகில் செல்வதற்கு எல்லாருக்கும் பயமாய் இருந்ததினால், மிகவும் தூரத்தில் நின்று அவனை வேடிக்கை பார்த்தார்கள்.

கர்த்தர் எனக்கு ஏவுதல் தந்தபடியால், நான் அவனுடைய அருகிலே சென்று அவன் மேல் கை வைத்து ஜெபித்தேன். மனுஷரால் கட்டுப்படுத்த முடியாத அளவு, அவ்வளவு பெலனுள்ளவனாய் இருந்த அவன், ஜெபித்த போதோ ஒரு ஆட்டுக்குட்டியைப் போல அமைதியாகி, சாதுவாகி விட்டான். காரணம், பரிசுத்த ஆவியின் வல்லமை அவனுக்குள் இருந்த அசுத்த ஆவியின் வல்லமைகளை மேற்கொண்டு அவனை ஆட்கொண்டது.

மறுநாள் அவன் சாட்சி கொடுத்தபோது ஒரு குழந்தையைப் போல அவ்வளவாய்த் தன்னைத் தாழ்த்தி, தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தான்.

தேவபிள்ளையே, உனக்கு இந்த உன்னதமான பெலன் தேவை. பயங்கரமான சூழ்நிலைகளையும், பொல்லாத மனுஷரையும் சந்திக்க மாம்ச பிரகாரமாய் நீ ஒருவேளை பயப்படலாம். ஆனால் அபிஷேகம் உன்னில் இருக்கும் போது நீ பயப்படவேண்டிய அவசியமே இல்லை.

உலகையும், மாம்சத்தையும், பிசாசையும் ஜெயித்த தேவன் உன்னை ஜெயங்கொண்டவனாய் விளங்கப் பண்ணுகிறது மாத்திரமல்ல, உனக்கு உன்னத பெலத்தையும் தருகிறார் என்பதை மறந்து போகாதே.

இயேசு சொன்னார்: ''சத்திய ஆவியானவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்'' (யோவான் 14:17).

அந்த பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே நம்மோடு இருப்பதினால் நமக்கு ஒரு பெரிய பெலன். அந்த பெலத்தினால் தனிமை உணர்ச்சியை நாம் மேற்கொள்ளுகிறோம். தோல்வியை ஜெயமாக்குகிறோம்; அழுகையின் பள்ளத்தாக்கில் உருவ நடந்து நீரூற்றாக மாற்றிக் கொள்ளுகிறோம்.

யோவானை தனியனாய் பத்மு தீவிலே சிறையிருப்பிலே போட்டார்கள். ஆனால் அவனுக்குள் உன்னத பெலனாகிய தேவ ஆவியானவர் வாசம் பண்ணினார்.

அந்த ஆவியானவர் அவனை ஆவிக்குள்ளாக்கி, பரலோக மேன்மையை, மகிமையை எல்லாம் வெளிப்படுத்த சித்தமானார். அவனுக்குப் பெலனாக கோடிக்கணக்கான தேவதூதர்களும், முழு பரலோகமும் நிற்கிறதை அவனால் காண முடிந்தது. அவன் உள்ளம் எவ்வளவாய் பரவசப் பட்டிருக்கும்!

தேவபிள்ளையே, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிறது மாத்திரமல்ல, எப்போதும் பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்தை நீ உணருவாயாக.

"நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"

(லூக்கா 11:13).

# பரிசுத்தம்!

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்"

(I கொரி 3:16,17).

நாம் பரிசுத்த ஜீவியம் செய்வதற்கும், உலகத்தால் நம்மை கறைபடாமல் பாதுகாத்துக்கொள்வதற்கும் "நாம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம்" என்கிற உணர்வு நமக்கு மிகவும் அவசியம்.

நாம் பரிசுத்தமாய் ஜீவித்தே தீரவேண்டும். காரணம், நாம் கர்த்தருடைய ஆலயமாய் இருக்கிறோம்!

இந்தியாவிலுள்ள பல புறஜாதி மக்களின் ஆலயங்களைப் பாருங்கள். செருப்பை கழற்றி விட்டுதான் உள்ளே செல்ல வேண்டும். வெளிப்பிரகாரமான பரிசுத்தத்தில் அவர்கள் அக்கரை காட்டுகிறார்கள்.

இன்னும் சில ஆலயங்களுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, பயபக்தியோடு கூட செல்கிறார்கள். காரணம், அந்த ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

தேவபிள்ளையே, நாம் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறோம். அந்த தேவன் நமக்குள்ளே வாசமாய் இருக்கிறார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நமக்குள்ளே வாசமாயிருக்கிற அந்த தேவனுக்கு நாமே பரிசுத்த ஆலயமாய் இருக்கிறபடியினால், நாம் நம்முடைய சரீரத்தை, நம்முடைய ஆத்துமாவை, நம்முடைய ஆவியை எவ்வளவு ஜாக்கிரதையோடு கூட பாதுகாக்க வேண்டும்! பரிசுத்தத்திலே நடக்க வேண்டும்!

சில வாலிபர்கள் கேட்பதுண்டு: சினிமாவுக்கு போகக் கூடாது என்று வேதத்தில் எங்கேயாவது எழுதியிருக்கிறதா? மதுபானம் அருந்தக் கூடாது என்று எங்கேயாவது எழுதியிருக்கிறதா? புகை பிடிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறதா? என்று கேட்பார்கள்.

அந்தக் கேள்வியை அவர்கள் கேட்பதிலிருந்தே, அவர்களுக்கு தூய்மையான வாழ்க்கையில் ஆர்வம் இல்லையென்று நாம் அறிந்து கொள்ளலாம். மட்டுமல்ல, அவர்கள் தங்களுடைய சரீரத்தை இன்னும் அசுசிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

சினிமா பார்க்கும்போதும், சிகரெட்டுகளை ஊதும்போதும் நம்முடைய கண்களும், இருதயமும் கறைபடுகிறது, அசுத்தமடைகிறது! பரிசுத்தமுள்ள தேவன் நமக்குள் வாசம் பண்ணிக்கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட அசுத்தங்களை நாம் நமக்குள் அனுமதிக்கலாமா? சற்று சிந்தித்துப் பார்ப்போமா?

எந்த ஒரு விசுவாசி தன்னுடைய சரீரத்தை தேவனுடைய ஆலயம் என்று எண்ணுகிறானோ, அவன் இப்படிப்பட்ட கேடுபாடுகளுக்கெல்லாம் விலக்கி தன்னைப் பாதுகாத்துக்கொள்வான்.

தேவபிள்ளையே, நம்முடைய இருதயத்தையும் சரீரத்தையும் கர்த்தருடைய பரிசுத்த ஆலயமாய் இந்த பூமியிலே ஒப்புக்கொடுத்தால், நித்தியத்திலே பரலோக ராஜ்யம் முழுவதையும் நமக்குத் தந்தருளுவார்:

பழைய ஏற்பாட்டை நீங்கள் வாசித்துப் பாருங்கள். சாலொமோன் கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்டின போது அதில் எந்த இரும்பு ஆயுதங்களின் சத்தமும், சுத்தி, வாட்ச் முதலானவைகளின் சத்தமும் கேட்காதபடி, பணி தீர்ந்த பரிசுத்தமுள்ள கற்களினால் அதை கட்டி முடித்தான்.

கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தில் வீணை சத்தங்கள் கேட்கக்கூடாது என்பதைக் குறித்து சாலொமோன் எவ்வளவு ஜாக்கிரதையுள்ளவனாயிருந்தான்! அப்படியானால் நாம் நம்முடைய சரீரத்தை பரிசுத்தமாய் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு அவசியமாயிருக்கிறது.

மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது (எபே 5:3).

''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா'' (I கொரி 6:19).

# பரிசுத்தமில்லாமல்!

''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்ப தில்லையே'' (எபி 12:14).

கிறிஸ்தவ வாழ்க்கையில் ''பரிசுத்தமானது'' ஒவ் வொரு கிறிஸ்தவனின் உயிர்த்துடிப்பாக மூச்சாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நிமிடமும் பரிசுத்தத்திற்காக அவன் முயற்சி செய்ய வேண்டும். பரிசுத்தம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதுகெலும்பு என்பதை மறந்து போய் விடக்கூடாது.

''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்ப தில்லையே'' என்று வேதம் சொல்லுகிறது. சில மொழி பெயர்ப்புகள், ''பரிசுத்தமில்லாமல் ஒருபோதும் ஒரு மனுஷனும் தேவனைப் பார்க்கவே முடியாது'' என்று சொல்லுகிறது. பரிசுத்தமில்லாமல் பரலோக ராஜ்யத்திற் குள் பிரவேசிக்கவும் முடியாது.

அழுக்கடைந்த வஸ்திரங்களோடு ஒரு ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசிக்க முடியுமா? போர் வீரர்கள் தடுத்து நிறுத்தி விடுவார்களே! கந்தல் ஆடையோடு கூட திருமண வைபவத்திற்குள் புக முடியுமா? ''கடைசியில் வா, பார்க்கலாம்'' என்று சொல்லுவார்கள் அல்லவா?

அப்படியானால், பரலோகமாகிய ஒளிமயமான தேசத் திலே நாம் பிரவேசிப்பதற்கும், தேவாதி தேவனுடைய பரிசுத்த முகத்தை தரிசிப்பதற்கும் நமக்கு பரிசுத்தம் எவ் வளவு அவசியம்!

வேதம் சொல்லுகிறது: ''இருதயத்தில் சுத்தமுள்ளவர் கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார் கள்'' (மத் 5:8).

தேவன் மனுஷனிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் வாழ்க்கையில் பரிசுத்தம்தான். ஒவ்வொரு மனுஷனும் பூமியில் இருக்கும்போது பரலோகத்தோடும், பரலோகத்தின் தேவனோடும் இடைவிடாத தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுடைய அனுபவமும் அதுவாகவே இருந்தது.

ஏனோக்கு தேவனோடுகூட சஞ்சரித்தார் (ஆதி 5:24).

நோவா தேவனோடு கூட சஞ்சரித்தார் (ஆதி 6:9).

ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டார் (யாக் 2:23).

மோசே தேவனுடைய மகிமையை தரிசித்தார். மட்டுமல்ல, தேவனே மோசேயோடுகூட முகமுகமாய்ப் பேசினார் (யாத் 33:11).

தாவீது தேவனோடு உறவாடி மகிழ்ந்ததினால் கர்த்தர் தாவீதைக் குறித்து, அவனே என் இருதயத்திற்கேற்றவனாய் கண்டேன் என்று சாட்சி பகர்ந்தார் (அப் 13:22).

தேவபிள்ளையே, அவர்களுக்கெல்லாம் கிருபை செய்து பரிசுத்தத்தைத் தந்த ஆண்டவர், நிச்சயமாகவே உனக்குத் தர வல்லமையுள்ளவர் அல்லவா? அவர் நம்முடைய பரம பிதா அல்லவா? அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிற தேவன் அல்லவா?

நாம் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளையாகவும் இருக்கிறது என்பதை நாம் மறந்து போய் விடக் கூடாது!

கர்த்தர் சொல்கிறார்: "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தர்களாய் இருப்பீர்களாக"
(லேவி 11:45).

நம்முடைய பரம பிதா பரிசுத்தத்தில் பூரண சற்குணராய் இருக்கிறதுபோல நாமும் பூரண சற்குணராய்

விளங்க வேண்டும் என்பதே கர்த்தருடைய நோக்கமும் கட்டளையும், சித்தமுமாய் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு இதைக் குறித்து எழுதும் போது ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே''
(1 பேதுரு *1:15,16*).

தேவபிள்ளையே, கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாகி விட்டது. பரிசுத்தத்தில் பூரணமடைவாயாக! பரிசுத்தமுள்ள பரலோக தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு!

''உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள், நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்'' (யோசுவா *3:5*).

# பரிசுத்தத்தைக் காத்துக்கொள்!

"...நூவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளைத் தீட்டுப்படுத்தலாகாது என்று சொல்" (எண் 18:32).

நாம் கர்த்தருக்கென்று பரிசுத்த ஜனமாயிருக்கிறோம். தூய்மையாய் ஜீவிக்க தீர்மானம் செய்யும்போது அந்த தீர்மானத்தை கர்த்தர் பலப்படுத்தி நமக்கு துணை நின்று ஆவியோடு கூட இருக்கிறார்.

அநேகர் தீர்மானங்களை எடுப்பதில்லை பிரதிஷ்டை செய்வதில்லை. அவர்கள் எப்போதும் தோல்வியையே கண்டுகொண்டிருக்கிறபடியால், தாங்கள் பிரதிஷ்டை செய்தால் எங்கே அதை நிறைவேற்ற முடியாமல் போய் விடுமோ என்று எண்ணி பிரதிஷ்டை செய்யாமல் முடிவில் அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வாழுகிறார்கள்.

வேதத்தில் பலவகையான பிரதிஷ்டைகளை காண்கிறோம். அன்று பக்தியுள்ள பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்கென்று பிரதிஷ்டைச் செய்தார்கள் (1 சாமு 1:11).

ஆசாரியர்கள், ஆசாரிய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை செய்தார்கள் (யாத் 28:41).

எருசலேம் தேவாலயம் கர்த்தருடைய மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது (1 இராஜா 8:63).

தேவபிள்ளையே, உன்னை நீ கர்த்தருடைய பரிசுத்தத்துக்கென்று பிரதிஷ்டை செய்வாயா?

உன்னைத் தீட்டுப்படுத்தும் பல காரியங்களைக் குறித்து வேதம் நமக்கு எச்சரித்துச் சொல்லுகிறது. கவனித்துப் பாருங்கள்.

''பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசி தனங்களும், கொலைப்பாதகங்களும், களவுகளும், பொரு ளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகா ரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடு புறப்பட்டு'' மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்று வேத எச்சரிக்கிறது (மாற்கு 7:21,22).

தேவபிள்ளையே, அவைகளிலிருந்து நீ தப்பி தீட்டு படாமல் உன்னைக் காத்துக்கொள். உன் தேவனுகி கர்த்தர் பரிசுத்தராய் இருக்கிறது போல, நீயும் கர்த் ருக்குப் பிரியமான பரிசுத்தவானுக காணப்படவேண்டு

தானியேலின் வாழ்க்கையைக் கவனித்துப் பார். தா யேல் ராஜாவின் போஜனத்தினுலும் அவர் பான பண்ணும் திராட்சை ரசத்தினுலும் தன்னைத் தீட்டுப்படு தலாகாதென்று தீர்மானம் பண்ணிக்கொண்டான்

(தானி 1:8

கர்த்தருக்காக எடுக்கும் உறுதியான தீர்மானம் ''பி திஷ்டை'' என்று அழைக்கப்படுகிறது. உறுதியான தி மானம் இல்லாவிட்டால், விசுவாசம் பரீட்சிக்கப்படு போது ஆவிக்குரிய ஜீவியம் தள்ளாடி விடும்.

பிரதிஷ்டையின் ஜீவியம் இல்லாவிட்டால் பலவி மான விபரீத உபதேசக் காற்றுகள் நம்மை பல திசை களில் சூழ்ந்து அலைக்கழித்து விடக்கூடும்.

பாபிலோனின் அசுத்தங்களா? அல்லது பரிசுத்தமா ஜீவியமா? திட்டான திராட்சை ரசமா? அல்லது கர்த் ருக்கேற்ற பரிசுத்தமான உணவு வகைகளா? அன்றைக் தானியேல் தீர்மானிக்க வேண்டியதிருந்தது.

தானியேல் செய்த தீர்மானமெல்லாம் பரிசுத்தரை பற்றிய தீர்மானங்கள்தான். பரிசுத்தரைப் பற்றி பிரதிஷ்டையும் தீர்மானங்களும் நம்முடைய பரிசுத் தைப் பாதுகாக்கிறது. கர்த்தருக்குள் நம்மை நி நிறுத்துகிறது.

''உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' (லேவி 19:2). என்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

நாம் நம்முடைய பங்கை நிறைவேற்றி தீர்மானங்களையும் பிரதிஷ்டைகளையும் மேற்கொள்ளும்போது கர்த்தர் தம்முடைய பங்கை நிறைவேற்றி பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தந்து நம்மை பரிசுத்தத்தோடு பாதுகாத்துக்கொள்ளுவார். தேவபிள்ளையே, உன்னை பரிசுத்தத்திற்கென்று இப்பொழுதே ஒப்புக்கொடு!

''ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்'' (தானி 1:20).

# நீர் வளம்

''லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர் வளம் பொருந்தினதாயிருக்க கண்டான்'' (ஆதி 13:10).

ஆதியாகமம் 13-ம் அதிகாரத்தில் ஆபிரகாமுக்கும் லோத்துக்கும் ஒரு ''தெரிந்துகொள்ளும் முறையை'' கர்த்தர் கொடுத்தார்.

இரண்டு பேரும் தங்களுக்கு முன்பாக இருக்கிற தேசத்தை நோக்கிப் பார்த்தார்கள். ஆபிரகாம் லோத்தைப் பார்த்து நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன் என்றான்.

அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது. அந்த இடத்தை லோத்து தனக்கென்று தெரிந்து கொண்டான்,

லோத்தின் தெரிந்துகொள்ளுதல் பார்வைக்கு நன்மையைப் போல் இருந்தது. ஆனால் அவன் அதை தன்னுடைய சொந்த கண்களின் இச்சையின்படி தெரிந்தெடுத்தானேயொழிய கர்த்தருடைய ஆலோசனையின்படி தெரிந்தெடுக்கவில்லை.

நீர் வளத்தையும் நிலவளத்தையும் பார்த்தானே தவிர அந்த தேசத்தின் மக்கள்மேல் வரப்போகிற சாபத்தை நோக்கிப் பார்க்கவில்லை.

ஆடு மாடு வளர்ப்பதற்கு ஏற்ற ஒரு நிலம் இருக்கிறதை கண்டானேயொழிய, கொஞ்ச நாட்களுக்

அந்த தேசத்தை விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடவேண்டிய சூழ்நிலைவரும் என்று அவன் எண்ணிப் பார்க்கவே இல்லை.

ஆனால் ஆபிரகாமைப் பாருங்கள். நான் கர்த்தரையே சேவிப்பேன். அவர் என்னை அழைத்திருந்தவர். அவர் நிச்சயமாகவே மேன்மையாக என்னை நடத்துவார் என்று தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

ஆகவேதான் கர்த்தர் ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியையும் என்றென்றைக்கும் ஆசீர்வதித்தார். தான் ஆபிரகாமின் குமாரன் என்று அழைக்கப்பட அவர் வெட்கப்படவில்லை.

மோசேயைப் பாருங்கள். அவன் பெரியவனானபோது அவனுடைய எதிர்காலத்தைக் குறித்து அவன் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று.

ஒருவேளை அவன் பார்வோனின் குமாரத்தியோடு கூட உட்கார்ந்து எகிப்து தேசத்தை அரசாட்சி செய்திருப்பானென்றால் அவன் பெயர் அன்றைக்கு கொடிகட்டிப் பறந்திருக்கும். ஆனால் அவன் இன்னொரு பகுதியையும் சிந்தித்துப் பார்த்தான். அதுதான் தேவனுடைய பிள்ளைகளோடு கூட பாடு அனுபவிப்பது.

வேதம் சொல்லுகிறது: ''மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்''

(எபி 11:24,25,26)

அவன் கர்த்தரை தெரிந்து கொண்டபடியினுல் கர்த்தர் அவனை தெரிந்துகொண்டார். அவனை இஸ்ரவேல் ஜனத்திற்கு தலைவனுக கர்த்தருடைய தாசனுக உலகமெல்லாம் மெச்சிக் கொள்கிற ஒரு பெரிய மனுஷனுக கர்த்தர் அவனை உயர்த்தினுர்.

எத்தனையோ நூற்ருண்டுகள் கழிந்த பிறகு மோசேயை தன்னேடுகூட அழைத்து மறுரூபமலையில் தன் சீஷர்களுக்கு அறிமுகம் செய்தார்.

தேவபிள்ளையே, எந்த ஒரு மனுஷன் கர்த்தரை தெரிந்து கொள்கிருனே அவனுக்கு ஜெப ஜீவியத்தைத் தரவும், அவனை வல்லமையாய் பெலப்படுத்தவும், அவனை ஆசீர்வதிக்கவும் வல்லவராயிருக்கிருர்.

இன்று அநேக வாலிபர்கள் தீர்மானமில்லாதவர்களாய் வாழ்கிருர்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு பக்தி வைராக்கியமோ பரிசுத்தத்தைப் பற்றிய ஒரு உறுதியோ இல்லை. தேவபிள்ளையே, நீயோ பக்தியோடு முன்னேறுவாயாக.

''நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலது கையைப் பிடித்து தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்'' (சங் 73:23,24).

# கர்த்தரையே!

"நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசுவா 24:15).

நாம் கர்த்தருடைய சந்ததி. கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். கர்த்தருடைய அன்பை ருசித்த வர்கள். நாங்கள் என்றென்றும் ஆண்டவரையே சேவிப் போம் என்று யோசுவாவோடு கூட நாமும் தீர்மானமாய் சொல்லுவோமாக!

தன்னுடைய வயோதிப நாளில் யோசுவா இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் ஒன்று கூட்டி அழைத்தார். அவர் களுக்கு முன்பாக மூன்று காரியங்களை வைத்தார்.

ஒன்று நீங்கள் நதிக்கு அப்புறத்திலுள்ள தேவர்களை சேவிப்பீர்கள் என்றால் சேவிக்கலாம். அல்லது யோர்தான் நதிக்கு இந்தப் பக்கத்தில் இருக்கிற எமோரியரின் தேவர் களை சேவிக்க வேண்டுமென்றால் அவைகளையும் சேவிக்க லாம். மூன்றாவதாக இம்மட்டும் எங்களை நடத்திக்கொண்டு வந்த தேவனாகிய கர்த்தரை சேவிக்கலாம். இந்த மூன்றில் ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்.

தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், தாங்கள் தெரிந்து கொண்டதை சேவிக்க தீர்மானிப்பது வாழ்க்கையில் நித்தியமான திருப்பங்களை உண்டு பண்ணுகிறது.

சிலர் உலகத்தின் மேன்மைகளை தெரிந்துகொள்ளு கிறார்கள். சிலர் மற்றவர்களை பிரியப்படுத்துவதை தெரிந்து கொள்ளுகிறார்கள். சிலர் உலகத்தின் ஆசாபாசங்களை தெரிந்துகொள்ளுகிறார்கள்.

தேவபிள்ளையே, நீ எதை தெரிந்துகொள்ளுகிறாய்? இன்று நன்மையான காரியத்தை தெரிந்துகொள்ளுவாய் என்றால், உண்மையான தேவனை தெரிந்துகொள்ளுவாய்

என்றால் நிச்சயமாகவே நீ ஆசீர்வதிக்கப்பட்டவளாய் விளங்குவாய்.

இன்று நீ ஒரு உத்தியோகஸ்தனாய் இருக்கலாம். அல்லது அரசியல் பிரமுகனாய் இருக்கலாம். அல்லது வீட்டிலிருக்கும் சாதாரண ஒரு பெண்மணியாக விளங்கலாம். ஆனாலும் உன்னை முக்கியமாக நேசிக்கக்கூடிய ஒருவர் உனக்கு தேவை. அவரை குடும்பத்தோடு சேவிக்க தீர்மானம் செய்.

நம்முடைய தெரிந்துகொள்ளுதலில்தான் நம்முடைய எதிர்காலத்தின் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது. நன்மையான காரியங்களை தெரிந்துகொள்ளும்போது நித்தியமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும். போலியானதை தெரிந்துகொண்டால் துக்கம்தான் வாழ்க்கையை சூழ்ந்துகொள்ளும்.

பேனா வாங்க செல்கிறீர்கள். பார்ப்பதற்கு பளப்பளப்பாய் வெளித்தோற்றத்தில் இருக்கிறதைப் பார்த்து அதிக விலை கொடுத்து வாங்குகிறீர்கள். இது சரியாக எழுதாவிட்டால் உள்ளம் வேதனைப்படும், என்றாலும் கூட வேண்டாம் என்று தூர எறிந்து விடலாம். அதினால் பெரிய நஷ்டம் ஒன்றும் வருவதில்லை.

துணி கடைக்குச் சென்று துணிமணி வாங்குகிறீர்கள். பகட்டாகவும் பளப்பளப்பாகவும் இருக்கிற துணியை எடுக்கிறீர்கள். ஒருவேளை முதல் சலவையிலேயே அது சாயம் போய் கிழிந்துபோனால் துக்கப்படுவீர்கள். அதை வேண்டாம் என்று ஒதுக்கி விடலாம். பெரிய நஷ்டம் ஒன்றும் வருவதில்லை.

ஒருவன் திருமணம் செய்யப்போகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால் அவன் தவறான பெண்ணை தெரிந்தெடுத்து விட்டால் வாழ்நாள் எல்லாம் கஷ்டப்படுவான். வேதனை அதிகமானதாகவும், வாழ்க்கை போராட்டமானதாகவும் ஆகி விடும்.

அதே நேரத்தில் ஒரு மனுஷன் பூமிக்குரிய வாழ்க்கையில் கர்த்தரை தெரிந்து கொள்ளாமல் போவான் என்றால் அதைப்பார்க்கிலும் பெரிய இழப்பு வேறு ஒன்றும் இல்லை.

சுய சித்தத்தை மனுஷனுக்குக் கொடுத்த ஆண்டவர் ஜீவனையும் மரணத்தையும் நம் முன் வைக்கிறார். ஆசீர்வாதங்களையும் சாபத்தையும் நம் முன் நிறுத்துகிறார். தெரிந்துகொள்ளவேண்டிய கடமையை நம் கரத்தில் தருகிறார்.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை வழி நடத்தும்படி கர்த்தருடைய கைகளில் உன்னை ஒப்புக் கொடுப்பாய் என்றால், புல்லுள்ள இடங்களிலும், அமர்ந்த தண்ணீர் களண்டையிலும், சமாதானத்தின் பாதையிலும், உன்னை வழி நடத்துவார்.

"உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவி கொடுத்து. அவரைப் பற்றிக் கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்" (உபா 30:20).

# பவுலின் தீர்மானம்!

''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ பட்டயமோ'' (ரோமர் 8:36).

தமஸ்கு செல்லும் வழியில் கர்த்தரால் சந்திக்கப்பட்டு, கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்தான் அப்போஸ்தலனாகிய பவுல்.

கிறிஸ்தவ சபைகளை ஒடுக்கி அழிப்பதற்கு பிரதான ஆசாரியர்களிடத்தில் நிருபங்களை வாங்கிய அவனைக் கொண்டு சபையைக் கட்டி எழுப்பும் நிருபங்களை எழுதவும் கர்த்தர் சித்தங்கொண்டார்.

காரணம்: அப்போஸ்தலனாகிய பவுல் அன்று தன்னை கர்த்தருக்கு முன்பாக நிறுத்தி செய்த தீர்மானம்தான்!

அவர் சொல்கிறார்: ''பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ் சாட்டப்படாதவன்.

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்து

வுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும், அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்'' (பிலி 3:6-11).

தேவபிள்ளையே, பவுலைப் போல இன்றே தீர்மானம் செய்வாயா? பவுலைப்போல மேலானவைகளையும் மேன்மையானவைகளையும் தெரிந்துகொள்ளுவாயா?

''உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' (ரோமர் 8:39). இதுவே அவரது தீர்மானம்!

கிறிஸ்துவை சேவிக்க தீர்மானிக்கிறவர்கள் புதிய சிருஷ்டியாகிறது மாத்திரமல்ல, புதிய சிருஷ்டியாய் வளர்வதற்காகவும் தங்களைப் பூரணமாக அர்ப்பணிக்கிறார்கள். ஆம், கிறிஸ்தவ வாழ்க்கையே ஒரு அர்ப்பணிப்பின் வாழ்க்கைதான்.

அப்போஸ்தலனாகிய பவுல் நாம் புது சிருஷ்டியான போது எடுத்துக்கொண்ட பல தீர்மானங்களை விவரிக்கிறார். முன்பு இருந்த பழைய பாவ பழக்கவழக்கங்களை கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுத்தார்.

இனி என்னுடைய கைகள் சுய சித்தத்தைச் செய்வதில்லை. இனி என் கால்கள் பாவ பழக்க வழக்கங்களை நோக்கி ஓடுவதில்லை. இனி என்னுடைய உள்ள அருவருப்பான சிந்தனைகளை சிந்தித்துக் கொண்டிருப்பதில்லை என்று தீர்மானித்தார்.

மாத்திரமல்லாமல், அவைகளை சிலுவையிலே பலியாக்கினார். ''கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட்டேன்'' என்பதே அவருடைய சாட்சியாய் இருந்தது.

முன்பெல்லாம் அவருக்கு மேன்மை பாராட்ட பல காரியங்கள் இருந்தன. எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட்ட மேன்மை. இஸ்ரவேல் வம்சத்தில் பிறந்த மேன்மை. கல்விமானாய் இருந்த மேன்மை எல்லாம் அவருக்குள் இருந்தது. பல காரியங்களைக் குறித்து அவர் மேன்மைப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் கிறிஸ்துவுக்குள் வந்தபோதோ அவர் சொல்கிறார்: ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்'' (கலா 6:14) என்றார். அதுவே அர்ப்பணிக்கப்பட்ட புதிய வாழ்க்கை.

''கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புதிய சிருஷ்டியே காரியம்'' (கலா 6:15). ஆமென்!

அல்லேலூயா!

அத்தியாயம் 12

## உறுதியான மனம்!

''உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்''

(ஏசாயா 26:3).

''உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனம்'' என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் மனதின் உறுதி மிக முக்கியமானது. உறுதியான மனமே ஜெய ஜீவியத்தை நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் கொண்டு வரும்!

பாவத்திலிருந்தும், அக்கிரமத்திலிருந்தும் விடுதலை பெற்ற நாம் கர்த்தரை உறுதியான மனதோடு பற்றிக் கொள்ள வேண்டும்.

ஆவியின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கு முற்றிலும் நம்மை அர்ப்பணிக்கும்போதுதான் கர்த்தருடைய ஒத்தாசையும், உன்னத பலமும் நமக்குக் கிடைக்கும். கர்த்தர் நம்மைப் பூரண சமாதானத்துடன் நிச்சயமாகவே காத்துக்கொள்ளுவார்.

உதாரணமாக ரூத், நகோமியை எவ்வளவாய் உறுதியான மனதோடு பற்றிக் கொண்டாள்! நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பி போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம் (ரூத் 1:16) என்று உறுதியாய் சொன்னாளே! மனதில் தீர்மானித்த அவள் அப்படியே நகோமியைப் பின்பற்றினாள். ஆகவே கர்த்தருடைய சந்ததியில் அவள் இடம் பெற்றாள்.

தேவபிள்ளையே, நாம் இயேசுவை ஏற்றுக்கொள்வது ஒரு நாளுக்கோ, அல்லது இரண்டு நாளுக்கோ அல்ல. அது என்றென்றைக்குமுள்ள தீர்மானமாய் இருக்க

வேண்டும். அப்பொழுதுதான் போராட்டங்களும், பாடுகளும் நம்மை அசைக்காதபடி நாம் உறுதியுள்ளவர்களாய் ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிப்போம்.

இன்னொரு உதாரணத்தையும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன் அது தானியேலின் மன உறுதி. தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது என்று அவன் உறுதியாய்த் தீர்மானித்தான். பாபிலோன் ராஜாவின் திராட்ச ரசத்தையும், உணவு வகைகளையும் வெறுத்து ஒதுக்கி தன்னை கர்த்தருக்கென்று பரிசுத்தவானாய் பிரதிஷ்டை செய்தான் (தானி 1:8).

தேவபிள்ளையே, இந்தக் கொடிய காலத்தில் நம்முடைய ஆத்துமாவையும், மனதையும் கறைப்படுத்தக்கூடிய ஏராளமான பாவங்கள் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது. இந்த உலகத்தின் வேஷங்கள், உலகத்தின் ஆசாபாசங்கள், உலகத்தின் ஆசை இச்சைகள் புதிது புதிதாக எல்லா இடங்களிலும் நடனமாடுகிறது. வாலிப உள்ளங்களைச் சுண்டி இழுக்கிறது.

சாத்தான் கொண்டு வருகிற நயவஞ்சகமான கேலிக்கைகளுக்கு விலக வேண்டுமென்றால் நம்முடைய மனம் கல்வாரி சிலுவையிலே உறுதியாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த உலகத்தின் வேஷங்களுக்கு நாம் நம்மைப் பாதுகாக்க முடியும்.

தீர்மானமும் பிரதிஷ்டையுமே நம்முடைய மனதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் காக்கிறது என்பதை நாம் மறந்து போய்விடக்கூடாது. அந்த தீர்மானத்தில் மனதை உறுதியாக இணைத்து கட்டுவோமாக.

உதாரணமாக அதிகாலையிலே நான் ஐந்து மணிக்கு எழும்பி ஜெபிப்பேன் என்று பிரதிஷ்டை செய்து மனதில் உறுதியாய் தீர்மானிக்காவிட்டால் அதிகாலையின் ஜெபம் தூக்கத்தில் மூழ்கிப் போகும்.

கிறிஸ்துவோடு நடப்பேன் என்று மனதில் உறுதியாய் இராவிட்டால் சாத்தானின் இச்சைகள் நம்மை வாரிக் கொண்டு போக நேரிடும்.

அன்று அப்போஸ்தலனாகிய பவுல் தன் மனதில் உறுதியான தீர்மானம் ஒன்றை எடுத்தார். ''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே''
(ரோமர் 8:36,37).

''ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்'' (I பேதுரு 1:13).

# அத்தியாயம் 13

## உள்ளிந்திரியங்கள்!

''தம்முடைய அம்பறாத்தூணியின் அம்புகளை என் உள்ளிந்திரியங்களில் படப்பண்ணினார்'' (புலம் 3:13).

ஒரு தேசத்திற்கு பகை தேசத்து எதிராளிகள் இருக்கக் கூடும். யுத்தக் காலத்தில் அந்த எதிரிகள் தங்களுடைய காலாட்படை, குதிரைப்படை, யானைப்படைகளோடு கூட தேசத்தை விழுங்குவதற்கு வரக்கூடும்.

அந்த எதிராளிகளின் படையைப் பார்க்கிலும் கொடிய படை ஒன்று உள் தேசத்திலேயே இருக்கும் என்றால் அந்த படையைப் பார்க்கிலும் ஆபத்தான படை வேறு ஒன்றும் இல்லை.

அந்த படையை ஐந்தாம்படை என்று சொல்லுவார்கள். அவர்கள் தேசத்தை காட்டிக் கொடுக்கும் துரோகிகள்.

''புறப்பகை கோடி எனினும் அஞ்சார்,
அகப்பகை ஒன்றிற்கு அஞ்சி நடுங்கிடுவார்''

இன்றைக்கும் இந்த ஐந்தாம்படையாக நம்முடைய தேசத்தில் லஞ்சம் வாங்குகிறவர்கள், கடத்தல்பேர் வழிகள், கள்ளநோட்டு வியாபாரி, இனமொழி வெறியர்களை தூண்டி விடுபவர்கள், தேசத்திற்குள்ளே இருந்து தேசத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் இதை காணலாம். நமக்கு வெளியரங்கமான விரோதிகளாக வான மண்டலத்தில் பலத்த ஆவிகளின் சேனைகள், துரைத்தனத்தின் அதிகாரங்கள் போராடுகின்றன. சாத்தான் மூர்க்கமாய் போராடுகிறான்.

ஆனால் வெளியரங்கமான இந்த சத்துருக்களைப் பாக்கிலும் மனுஷனுக்கு உள்ளேயிருந்து அவனுடைய உள்ளிந்திரியங்களிலே போராடுகிற சத்துருக்களும் உண்டு.

அந்த சத்துருக்கள் என்ன தெரியுமா? அவைதான் பலவகையான இச்சைகள், கோப வெறிகள், எரிச்சலின் ஆவிகள், முரட்டாட்டங்கள், கீழ்ப்படியாமை ஆகியவைகள்.

அவைகள் ஒரு மனுஷனுக்கு உள்ளேயேயிருந்து கொண்டு அவனை கறைபடுத்தி தீட்டுப்படுத்துகின்றன. சோதிக்கப்படுகிறவன் அவனவன் தன் சுய இச்சையினால் இழுப்புண்டு சோதிக்கப்படுகிறான். இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தை விளைவிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேதம் சொல்லுகிறது.

இந்த உள்ளிந்திரியங்களில் கிரியைச் செய்கிற பாவங்களைக் குறித்தும் இச்சைகளைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: ''என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது'' (ரோமர் 7:23).

உள்ளிந்திரியங்களில் அது கிரியைச் செய்து பாவத்திற்கும் உட்படுத்தி குற்ற மனசாட்சி வாதிக்கும்போது உள்ளிந்திரியங்கள் சோர்ந்து போகிறது! ''நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?'' (ரோமர் 7:24).

தேவபிள்ளையே, உள்ளிந்திரியங்களில் கிரியை செய்து போராடுகிற இச்சைகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருப்பாயாக!

அன்று சிம்சோன் வெளியரங்கமான பெலிஸ்தியரை முறியடித்தானே தவிர, அவனுக்குள்ளே போராடுகிற இச்சைகளை முறியடிக்க முடியாமல் தவித்தான். அதனால் அவனது இளமை, மேன்மை, அழைப்பு, தேவபெலன் எல்லாவற்றையும் நஷ்டப்படுத்தி விட்டான்.

ஆகவே தேவபிள்ளையே, உன் உள்ளிந்திரியங்களை எப்போதும் தேவ சமுகத்தில் நிறுத்தி பரிசுத்தமுள்ளவனாக காணப்படுவாயாக.

''நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்'' *(சங் 7:9).*

அத்தியாயம் 14

# எழும்பிப் பிரகாசி!

"தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிக்கச் செய்வார்" (எபே 5:14).

கர்த்தர் இன்றைக்கு விசுவாசிகளைத் தட்டி எழுப்புகிறார். புற ஜாதி மக்கள் மத்தியிலே தம்முடைய ஆவியை ஊற்றி எழுப்புதலைக் கட்டளையிடுகிறார்.

எங்கு பார்த்தாலும் தேவ ஜனங்கள் அவசர அவசரமாய் கிறிஸ்துவை அறிந்துகொண்டு அவருடைய வருகைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். கடைசி நிமிட நேரமாகி விட்டது.

ஊழியம் செய்கிறவன் இப்பொழுதே கர்த்தருக்கென்று ஊழியம் செய்யட்டும். ஜெபிக்கிறவன் இந்தக் காலத்தில் மௌனமாய் இராமல் ஊக்கமாய்" உறுதியாய் மன்றாடட்டும். பிரகாசிக்க விரும்புகிறவன் இப்பொழுதே கர்த்தருக்காக எழும்பி பிரகாசிக்கட்டும்.

இன்று அநேகர் வருகை சமீபித்து விட்டதைக் குறித்து அறியாமல், நித்தியத்தின் வாசல்கள் திறந்திருக்கிறதை உணராமல் தூக்க மயக்கமாய் இருப்பது எத்தனை பரிதாபமான ஒரு காரியம்!

பழைய விசுவாசிகள் என்று பெயர் பெற்றவர்கள் இன்று நிர்விசாரிகளாக, சுயதிருப்தியோடுகூட விதண்டாவாதம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தேவபிள்ளையே, கர்த்தருக்காக தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாயாக.

**1. தூங்குகிற யோனாவே:-**

ஆமணக்குச் செடியின் நிழலை விட்டு எழுந்திருப்பாயா? நூற்றுக்கணக்கான நினிவே பட்டணங்கள் உன் குரலைக் கேட்டு இரட்சிப்படைய காத்திருக்கின்றனவே!

இந்த நேரத்தில் நீ தூங்கி விழுவது நியாயம்தானா? கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் அல்லவா?

உன்னுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாக எழுந்திருப்பாயா? (II பேதுரு 1:10). யோனாவே முரமுரப்பின் தூக்கத்தை விட்டு விட்டு, துதியின் உற்சாகத்தோடு எழுந்திருப்பாயாக!

2. தூங்குகிற சிம்சோனே:-

தெலீலாவின் மடியை விட்டு எழுந்திருப்பாயா? விபசாரத்தின் ஆவிகளும், வேசித்தனத்தின் ஆவிகளும் இன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. நட்சத்திரம்போல பிரகாசித்த அநேக தேவனுடைய பிள்ளைகள் வலுசர்ப்பத்தின் வாலினால் இழுக்கப்பட்டு விழுகிறதைக் காண்கிறோம்!

தேவபிள்ளையே, வேசித்தன தூக்கத்துக்கு விலகி ஓடுவாயா? பரலோக மேன்மையையும், சுதந்தரத்தையும் அற்ப சிற்றின்பத்துக்காக விற்றுப்போடாதே. வேதம் உன்னை எச்சரிக்கிறது: "ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பு; ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" (வெளி 2:5).

3. தூங்குகிற ஐத்திகுவே:-

மூன்றாவது மெத்தையின் ஜன்னலோரம் அமர்ந்துகொண்டு நித்திரை மயக்கமாய் இருப்பது ஆபத்து அல்லவா? மேல் வீட்டில் விளக்குகள் பிரகாசிக்கிறது! ஆனால் நீயோ பிரகாசிக்கவில்லையே!

வல்லமையான சுவிசேஷம் பவுலினால் அறிவிக்கப்படுகிறது. ஆனால் அந்த சுவிசேஷம் உன் உள்ளத்தில் ஏறவில்லையே! ஐத்திகுவே, வாலிபனே, எழுந்திருக்கமாட்டாயா?

மூன்ருவது மாடியிலிருந்து கீழே விழுவது எவ்வளவு ஆபத்தானது! அதைவிட ஆபத்தானது அழைப்பிலிருந்து கீழே விழுவதாகும். அதிலும் ஆபத்தானது பரலோக பாதையிலிருந்து பாதாளத்திற்குள் விழுவதாகும். ஐத்திருவே எழுந்திருப்பாயா?

சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய்? (நீதி 6:9). அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனே, இலச்சையை உண்டாக்குகிற மகன் (நீதி 10:5).

''நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்'' (மாற்கு 13:36).

# அத்தியாயம் 15

## உங்களோடு இருப்பேன்!

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவான் 14:23).

தேவன் நம்மோடுகூட வாசம்பண்ணுகிறவர். இந்த வசனத்தை வாசித்து தியானிக்கும்போது பிதாவும், குமாரனும் நம்மோடுகூட வாசம் பண்ணுகிறார்கள் என்பதை நாம் அறியலாம்.

மட்டுமல்ல, ஆவியானவரும்கூட நம்மோடுகூட வாசம் பண்ணுகிறவராய் இருக்கிறார். சத்திய ஆவியானவர் உங்களோடே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள் என்று யோவான் 14:17-ல் நாம் வாசிக்கிறோம்.

திரித்துவ தேவன் நமக்குள் வாசம்பண்ணுவது எத்தனை பாக்கியமான ஒரு காரியம்! அவர் வாசம் செய்வது மாத்திரமல்ல, அவர் நம்மோடு போஜனமும் செய்கிறார். நம்முடைய அப்பத்தையும், தண்ணீரையும் அவர் ஆசீர்வதிக்கிறார்.

வெளிப்படுத்தல் 3:20-ஐ வாசித்துப் பாருங்கள். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன்; அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி 3:20).

தேவபிள்ளையே, உனக்குள் இறங்கி வாசம் செய்கிறாரா? உன் குடும்பத்தில் அவருடைய பிரசன்னத்தை

உணருகிறாயா? உன் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப் பட்டிருக்கிறார்களா? நீ கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாய் இருக்கிறாயா?

அவர் உன்னைப் பார்த்து இந்தச் சந்ததியை நான் எனக்கென்று ஏற்படுத்தினேன். அவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்று எதிர்பார்க்கிறாரே!

வேதத்தில் ஒரு சம்பவத்தை வாசித்துப் பாருங்கள். எம்மாவூருக்குப் போன சீஷர்கள் இயேசுகிறிஸ்துவை வருந்திக் கேட்டுக்கொண்டார்களாம். நீர் எங்களுடனே தங்கியிரும். சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று என்று அழைத்தார்கள்.

வேதம் சொல்கிறது: ''அவர் அவர்களுடனே தங்கும் படி உள்ளே போனார். அவர்களோடே அவர் பந்தியிருக் கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசிர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர் களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார் கள்'' (லூக்கா 24:29-31).

சற்று சிந்தியுங்கள். இந்த சீஷர்கள் இயேசுவைத் தங் களுடைய வீட்டிற்கு வருந்தி அழைத்தார்கள். அவர் வந் தார்; தங்கினார்; அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்தார்.

தேவபிள்ளையே, உனக்குள்ளும், உன் வீட்டிலும் கிறிஸ்து வந்து தங்கும்படி அவரை வருந்தி அழைப்பாயா? அப்பொழுது கர்த்தர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னைவிட்டு விலக்குவார்.

இன்று கர்த்தர் உனக்கு வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார்: ''கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட் டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக் கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.

நீ உன் தேவனுகிய கர்த்தரின் கட்டளைகளை கைக் கொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்'' (உபா 28:8,9).

இந்த பூமியில் இருக்கிற நாட்களில் நாம் நம்முடைய உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் கொடுக்கிறோம்.

ஒருநாள் கர்த்தர் நம்மை தமது வீட்டிற்கு அழைத்துச் செல்வார். பரலோக ஒளிமயமான தேசத்தில் கொண்டு சென்று, நமக்காக ஆயத்தம் பண்ணின நித்திய வீடுகளை நமக்குக் காண்பிப்பார். அந்த நாள் எத்தனை பாக்கிய மான ஒரு நாள்!

''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப் 16:31).

அத்தியாயம் 16

# என் ஆத்தும நேசரே...!

''என் ஆத்தும நேசரே......'' (உன் 1:7).

''என் ஆத்தும நேசரே!'' என்று நமது அருமை ஆண்டவரை அத்தனை உரிமையோடு, அத்தனை நெருக்கமான உறவோடு அழைப்பது போல, மனம் மகிழ்ந்து அழைக்க வேறு வார்த்தைகள் இல்லை.

ஆம், நம் ஆத்துமா வாஞ்சித்துக் கதறும் நேச கர்த்தரானவர் அவர்! நம் ஆத்துமாவை தம் மகிமையினாலும் நேசத்தின் உச்சிதங்களினாலும் நிரப்புகிறவர் அவர்!

கர்த்தரை ''ஆத்தும நேசர்'' என்று அழைப்பது உண்மையாகவே இருதயத்தை பொங்கப் பண்ணுகிறது. சூலமித்தி, ''ஆத்தும நேசர்'' என்று அழைத்ததும் மற்ற ஸ்திரீகள் அவளைப் பார்த்து, ''உன் நேசர் எதினால் விசேஷித்தவர்?'' என்று கேட்கிறார்கள்.

அதற்கு சூலமித்தி சொல்கிறாள்: ''என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர், பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்'' (உன் 5:9,10).

நம் ஆத்தும நேசர் வெண்மையும் சிவப்புமானவர். அல்லேலூயா! வெண்மை அவரது பரிசுத்தத்தைக் காண்பிக்கிறது. சிவப்பு அவரது தியாகத்தைக் குறிக்கிறது!

வெண்மையாய் லீலி புஷ்பம் முட்களின் நடுவே மலருவதைப் போலவே, சிலுவையில் அவர் பாவமில்லாத பரிசுத்தராக காணப்பட்டார்.

சிவப்பாய் சாரோனின் ரோஜா மலருவதைப் போலவே எனக்காக சிலுவையில் இரத்த வெள்ளத்தில் செந்நிற மலராக காணப்பட்டார். தன் உயிரைப்

பார்க்கிலும் என்னை அதிகமாய் நேசித்த அவரே என் ஆத்தும நேசர்.

அவர் முற்றிலும் அழகுள்ளவர். இவரே என் நேசர் எருசலேமின் குமாரத்திகளே! இவரே என் சிநேகிதர் (உன் 5:16).

''ஆத்தும நேசரே!''

ஆத்தும நேசரே என்று கிறிஸ்துவை அழைப்பதும், அவரை முழு ஆத்துமாவோடும் நேசிப்பதும், அவரது அன்பை ருசிப்பதுமே கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகச் சிறந்த மேன்மையாகும். அவர் நம்முடைய ஆத்தும நேசர்.

''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே 5:30).

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம் நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்.

அவரே நம்மை தெரிந்து கொண்டவர் (எபே 1:4).

அவரே நம்மை சிருஷ்டித்தவர் (கொலோ 1:16).

அவரே நம்மை மீட்டுக் கொண்டவர் (I கொரி 1:31)

அவரே நம்மை வரைந்துகொண்டவர் (ஏசா 49:16).

அவரே நமக்கு நித்திய ஜீவன் தந்தவர் (ரோமர் 6:23).

அவரே நமக்கு மன்னிப்பளிக்கிறவர் (மாற்கு 2:5).

அவரே நமக்கு சந்தோஷமானவர் (யோவான் 15:11)

அவரே நமக்கு சமாதானமானவர் (யோவான் 14:27)

அவரே அன்பு செலுத்துகிறவர் (யோவான் 13:34).

அவரிலே நாம் பாதுகாப்பாயிருக்கிறோம் (ரோமர் 8:34).

அவரிலே நாம் ஐசுவரியவான்களாயிருக்கிறோம் (எபே 1:7).

அவரிலே நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (எபே 1:3).

அவரே நம்முடைய ஆத்தும நேசர்! அவரில் முற்றும் நாம் சார்ந்து கொள்வோமாக! வனந்தரமான இவ்வுலகில், கவலையும், கண்ணீரும், பிரச்சனைகளும் நிறைந்த இப்புவியில், அவர் மார்பில் சார்ந்து, அவர் நேசத்தால் நிறைந்து ஜீவிப்போமாக! அவர் ஒருவரே நம் ஆத்துமாவை சந்தோஷிப்பிக்கிறவர்.

''காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்'' (உன் 2:3).

அத்தியாயம் 17

# நேசத்தின் உச்சிதங்கள்!

"அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்" (உன் 7:12).

ஆத்தும நேசருக்கு நமது நேசத்தின் உச்சிதங்களை கொடுப்பது எத்தனை பாக்கியமானது! ஆத்தும நேசரை நாம் நேசிக்கிறோம். ஆத்தும நேசரில் நாம் அன்பு கூருகிறோம். ஆத்தும நேசரின் கிருபைகளை நாம் அனுபவிக்கிறோம். அதோடு நின்று விடக் கூடாது. நம்முடைய நேசத்தின் உச்சிதங்களையும் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

நம் ஆத்தும நேசர் தன்னுடைய நேசத்தின் உச்சிதத்தை நமக்குத் தந்தாரல்லவா? அந்த உச்சிதங்களை தருவதற்காகவே அவர் இந்த பூமிக்கு இறங்கி வந்தாரே!

நம்மேல் வைத்த நேசத்தினால்தான், அவர் பாரமான சிலுவையை தூக்கிக்கொண்டு எருசலேம் வீதியிலே நடந்தார். நம்மேல் வைத்த நேசத்தினால்தான் முள்முடி சூட்டப்பட்டார். நம்மேல் வைத்த நேசத்தினால்தான் நிந்தைகளையும், அவமானங்களையும், பரியாசங்களையும் மகிழ்ச்சியோடு சகித்தார்.

அவர் தமது நேசத்தின் உச்சிதமாக தமது கடைசி சொட்டு இரத்தத்தையும் ஊற்றிக்கொடுத்தார். சரீரம் பிட்கப்பட ஒப்புக்கொடுத்தார். அந்த கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்க்கும்போதெல்லாம் நம் இருதயம் பொங்குகிறது.

"என் நேசரே, உமது நேசத்தின் உச்சிதங்களை எனக்குக் கொடுத்தீரே!" என்று துதிக்கத் தோன்றுகிறது.

அந்த ஆண்டவருக்கு நாமும் நம்முடைய நேசத்தின் உச்சிதத்தை கொடுக்க வேண்டுமல்லவா? நாம் ஆண்டவருக்கு கொடுக்கக் கூடிய நேசத்தின் உச்சிதங்கள் எது?

தாவீது ராஜா சொல்கிறார்: ''கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்'' என்றார் (சங் 116:12,13).

கர்த்தரைத் தொழுதுகொள்வதே நாம் தேவனுக்கு கொடுக்கக்கூடிய நேசத்தின் உச்சிதமாகும். கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் நாம் அவரை தொழுது கொள்ள வேண்டும்; நாம் அவருக்கு ஆராதனை செய்ய வேண்டும்; நாம் அவரை துதிக்க வேண்டும் என்பதுதான்!

அன்று ஆபிரகாம் தேவனாகிய கர்த்தருக்கு தன் நேசத்தின் உச்சிதமாக தன் மகனையே பலியிட ஒப்புக் கொடுத்தார்.

இன்று கர்த்தருக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். நருங்குண்டதும் நொறுங்குண்டதுமான இருதயத்தை அவர் புறக்கணிப்பவரல்ல.

கர்த்தர் விரும்பும் பலி என்ன தெரியுமா? உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியாகும். நாம் ஆண்டவரை துதிக்கத் துதிக்க அவருடைய இருதயம் மகிழுகிறது. கர்த்தர் துதியின் மத்தியிலே கடந்து வந்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

தாவீது தன் நேசத்தின் உச்சிதங்களை கர்த்தருக்கு கொடுக்க விரும்பினார். தன் வாழ்நாளெல்லாம் சேகரித்து வைத்த வெள்ளியையும், பொன்னையும், திரளான கேதுரு மரங்களையும் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் தாராளமாய் எடுத்துக் கொடுத்தார்.

என்னுடைய செல்வம் எனக்கு வேண்டியதாயிராமல் நான் பூமியிலே முழு பிரியம் வைத்து இருக்கிற கர்த்தருடைய ஊழியத்திற்காகவே கொடுப்பேன் என்று சொல்லி சகலத்தையும் அர்ப்பணித்தார் என்ற போதிலும் அவர் நேசத்தின் உச்சிதமாக கர்த்தரையே துதிக்க நிர்மானித்தார்.

சங்கீதப் புத்தகத்தின் உள்ள கடைசி பதினைந்து சங்கீதங்களை வாசித்துப் பாருங்கள். ஒவ்வொரு சங்கீதமும் கர்த்தரை துதிக்கிற துதியாகவே அமைந்திருக்கிறது.

நம்முடைய தேவன் துதிக்குப் பாத்திரரானவர். சகல உண்மைக்கும், கனத்திற்கும் பாத்திரரானவர். அவர் ஒருவரே ராஜாதி ராஜா. அவர் ஒருவரே கர்த்தாதி கர்த்தர்.

''கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்'' (சங் 48:1; 96:4).

''நீதிமான்களே, கர்த்தருக்குள் களி கூருங்கள்; துதி செய்வது செம்மையானவர்களுக்குத் தகும்'' (சங் 33:1).

## அத்தியாயம் 18

# வழுவாது காப்பவர்!

"வழுவாதபடி உங்களைக் காக்கவும்" (யூதா 1:24).

நம்முடைய தேவன் நம்மை வழுவாதபடி காப்பவர் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்த வல்லமையுள்ளவர். அல்லேலூயா!

நாம் வழுவிப் போவதில்லை. காரணம், நம்முடைய தேவனுடைய கரம் நம்முடைய கைகளை இறுகப் பற்றிப் பிடித்திருக்கிறது.

நம்முடைய கால் சற்றே சறுக்கும்போது கர்த்தருடைய கிருபைகள் நம்மை அருமையாய் தாங்குகிறது.

தேவபிள்ளையே, தேவன் உன்னை வழுவாதபடி காக்க வல்லமையுள்ளவர் என்பதை திரும்பத் திரும்ப அறிக்கை செய்வாயாக!

சாத்தான் நம்முடைய விசுவாசத்தை உடைக்க முயற்சிக்கிறான். பயத்தைக் கொண்டு வருகிறான். கர்த்தர் பேரில் சந்தேகத்தை கொண்டு வருகிறான். அவர் வழுவாதபடி காக்க வல்லமையுள்ளவர் அல்ல என்கிற எண்ணத்தை உருவாக்க முயற்சிக்கிறான். தேவபிள்ளையே, அதற்கு ஒருபோதும் இடங்கொடுக்காதே.

உலகத்தில் இருப்பவனிலும் நம்மில் இருப்பவர் பெரியவர். உலகத்தில் இருக்கிறவன் நம்மை வழுவிப் போகச் செய்ய முயற்சிக்கும்போது, நம்முடைய தேவன் பெரியவராயிருந்து நம்முடைய கரத்தை தாங்கி நடத்துகிறார். ஆகவே, நாம் வழுவுவதில்லை.

வேதம் சொல்லுகிறது: "அவன் நிலை நிறுத்தப் படு வான்! தேவன் அவனை நிலை நிறுத்த வல்லவராயிருக் கிறாரே" (ரோமர் 14:4).

சமீபத்தில் அநேக கல்லூரி மாணவ மாணவியரிடமிருந்து வந்த கடிதங்கள் எல்லாம் என்னுடைய உள்ளத் திற்கு மிகுந்த வேதனையை கொடுத்தன.

காரணம், அந்தக் கடிதங்கள் எல்லாம் ஒரு பயத்தினால் எழுதப்பட்டவைகளாய் இருந்தன. "சகோதரனே, நான் நெருக்கப்படுகிறேன். என்னோடு படிக்கிற மாணவிகள் எல்லாம் என்னை பாவத்துக்குள்ளாக இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள். விழுந்து விடுவேனோ? என்று எனக்கு பயமாக இருக்கிறது."

இன்னொரு சகோதரி எழுதியிருந்தாள்: "ஞாயிற்றுக் கிழமை ஆராதனையில் கர்த்தருடைய பிரசன்னத்திலே நிரம்பியிருக்கிறேன். வெளியே வரும்போது உலகத்தின் கவர்ச்சிகள் என் ஆத்துமாவை கறைப்படுத்துகிறது. விழுந்து விடுவேனோ என்று பயமாய் இருக்கிறது" என் றெல்லாம் அந்தக் கடிதங்கள் குறிப்பிடுகின்றன.

நான் ஒன்று கேட்கிறேன். சகோதரியே, சகோதரனே, உன்னை விழும்படி செய்யவா கர்த்தர் உனக்காக சிலுவை யிலே தன்னுடைய இரத்தத்தை எல்லாம் ஊற்றி பாடு பட்டு ஜீவனைக் கொடுத்தார்?

அதற்காகவா அவர் பிதாவின் வலது பாரிசத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

உன்னை வழுவாமல் பாதுகாக்க அவர் திராணியில்லா மல் வல்லமையில்லாமல் போய்விட்டாரோ? இல்லவே இல்லை!

கர்த்தர் உனக்கு விசேஷித்த விதமான கிருபை கொடுத்திருக்கிறார் என்பதை மறந்து போக வேண்டாம்.

ரோமர் 6:14-ஐ எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது."

காலையில் எழுந்தவுடன் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். நான் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் என்னை மேற்கொள்ள மாட்டாது என்று விசுவாச அறிக்கைச் செய்யும்போது உங்களுடைய பயம், சந்தேகம், கலக்கம் எல்லாம் ஓடிப்போகும். கர்த்தர் கிருபையினால் உங்களைத் தாங்கியருளுவார்.

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்ய மாட்டான்" (I யோவான் 3:9).

# நிலை நிறுத்துவார்!

''அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலை நிறுத்த வல்லவராயிருக்கிறாரே'' (ரோமர் 14:4).

எத்தனை அருமையான வாக்குத்தத்தம் இது! எத்தனை ஆறுதலானது! கர்த்தர் நம்மை நிலைநிறுத்துகிறது மாத்திர மல்ல; தொடர்ந்து வழி நடத்தவும் வல்லமையுள்ளவராக இருக்கிறார். நாம் எல்லோரும் தேவனுக்கு முன்பாக நிற்கிறோம் என்பதை மறந்து போய்விடக் கூடாது.

இந்த வாக்குத்தத்த வசனத்தின் அடுத்த பகுதியிலே கர்த்தர் நமக்கு ஒரு எச்சரிப்பைக் கூடக் கொடுக்கிறார் என்ன எச்சரிப்பு?

வழிவிலகிப் போகிற சகோதரர்களை நாம் குற்றவாளிகளாக தீர்க்கக் கூடாது என்பதே அந்த எச்சரிப்பு. காரணம், அவர்களையும் கர்த்தர் நேசித்து திரும்பக் கொண்டு வருவதற்கு வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

ஒருமுறைஒரு புத்தகத்தை வாசித்தேன். ஒரு குருவானவர் எப்பொழுதோ செய்த ஒரு தவறை புத்தகத்தில் அச்சடித்து ஒரு சகோதரன் வெளியிட்டிருந்தார். அந்த குருவானவர் ஓய்வு நாளை சரியாக ஆசரிக்கவில்லை என்றும் அவரை பயங்கரமாகத் தாக்கி எழுதியிருந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்த புத்தகத்தை நான் படிக்க நேர்ந்தது. இப்பொழுது அந்த குருவானவருடைய நிலை என்னவோ எனக்குத் தெரியவில்லை.

இமைப்பொழுதிலே அவர் கர்த்தருடைய பாதத்தில் கண்ணீர் சிந்தி தன்னுடைய குறையை அறிக்கையிட்டு ஒப்புரவாகியிருக்கக் கூடும். கர்த்தர் அவரை நீதிமானாக ஆக்கியிருக்கக் கூடும். ஆனால் எழுதப்பட்ட அந்த

புத்தகமோ அந்த ஐயர் அவர்களை குற்றவாளியாகத் தீர்த்துக் கொண்டேயிருந்தது.

அந்தப் புத்தகத்தை எழுதிய சகோதரனைக் குறித்து நான் விசாரித்தபோது அவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று அறிந்தேன். எத்தனை வேதனையான காரியம்!

வேதம் சொல்கிறது: மற்றவர்களுடைய வேலைக் காரனை குற்றவாளியாக தீர்ப்பதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி. அவன் நிலைப்படுத்தப்படுவான். தேவன் அவனை நிலைப்படுத்த வல்லவராயிருக்கிறாரே!

(ரோமர் 14:4).

தேவபிள்ளையே, நீதிமான் எழுதரம் விழுந்தாலும் அவன் எழுந்திருப்பான் என்று பழைய ஏற்பாட்டிலே நாம் வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் உள்ள விசுவாசிகளுக்கு கர்த்தர் எத்தனை அதிகமான கிருபைகளைத் தருகிறவராயிருக்கிறார். நாம் மற்றவர்களை எப்படி நியாயம் தீர்க்க முடியும்?

அப்போஸ்தலனாகிய பவுல் அருமையான ஒரு ஆலோசனையைச் சொல்லுகிறார்: ''ஆதலால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்''

(1கொரி 4:5).

தேவபிள்ளையே, நம்முடைய வாழ்க்கை தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியினுடைய வாழ்க்கையுமே கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது. கிறிஸ்து நம்மை விட்டுவிடாமல் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்.

அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட நாம் எல்லோரும் முற்றிலும் அவருடையவர்களே! அவரே நம்மை தம்முடைய பாதையில் நடத்துகிறார், சிட்சிக்கிறார், கண்டிக்கிறார், சரிப்படுத்துகிறார்!

மட்டுமல்ல, யார் யார் முற்றிலும் கர்த்தரைச் சார்ந்து முழு நம்பிக்கையும் அவர் மேல் வைக்கிறார்களோ, அவர்கள் ஒருபோதும் விழுந்து போவதேயில்லை. ஒருபோதும் வெட்கம் அடைவதுமில்லை.

தேவபிள்ளையே, நீ பலவீனமான கிறிஸ்தவனாக இருக்கலாம். அடிக்கடி சோர்பு உன்னை மேற்கொள்ளலாம் என்றாலும் கலங்காதே. பெலன் இல்லாதவர்களுக்கு பெலத்தை அருளிச் செய்கிறவர், சத்துவம் இல்லாதவர்களுக்கு சத்துவத்தை பெருகப் பண்ணுகிற தேவன் உன்னை தாங்கியிருக்கிறார் என்பதை மறந்து போகாதே.

அவர் உன்னை தம்முடைய உள்ளங்கையில் வரைந்திருக்கிறார். உன்னுடைய மதில்கள் அவருக்கு முன்பாக எப்பொழுதும் நிற்கிறது.

''விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது'' (I பேதுரு 1:5).

## மனம்விட்டு உங்களோடே....!

இந்தப் புத்தகத்தின் மூலமாய் உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

நம்முடைய அருமை ஆண்டவர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களில் ஒன்று ''அமர்ந்த தண்ணீர்'' ஆகும். துயரமும், துன்பமும் நிறைந்த இந்த உலகத்தில் அவர் தரும் சமாதானமும் பரிசுத்தாவின் நிறைவும் நமக்கு அமர்ந்த தண்ணீராக இருக்கிறது. கிறிஸ்துவால் நாம் ஆறுதலடைகிறோம் மட்டுமல்ல, ஆவிக்குரிய வாழ்க்கையில் உற்சாகத்தோடு முன்னேறிச் செல்லுகிறோம். ஆழமான ஆவிக்குரிய ரகசியங்களை இந்தப் பகுதியில் உங்களுக்கு தொகுத்துகொடுத்திருக்கிறேன்.

இந்தப் புத்தகம் வெளியிடும்படி மிகவும் உதாரத்துவமாகக் கொடுத்த ஒரு சகோதரனுக்காகவும் அவருடைய குடும்பத்தினருக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவருடைய அன்பின் காணிக்கையினால் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று.

**Mr & Mrs S.Jaya Pandian B.E.& Family,**
**Trichy.**

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அவர்களையும் அவர்களுடைய அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக!

**இந்தப் புத்தகத்திற்கு ஒய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது இதை வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பு காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!**

## எமது புதிய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 266. | சேகரித்த முத்துக்கள்! | 5 00 |
| 267. | என் ஆத்தும நேசரே! | 5 00 |
| 268. | அவர் செட்டையின் கீழ்! | 5 00 |
| 269. | பூரணத்தை நோக்கி! | 5 00 |
| 270. | தாழ்மையின் ஆசீர்வாதங்கள்! | 5 00 |
| 271. | நடனத்தோடு! | 5 00 |
| 272. | ஞானம் கூப்பிடுகிறது! | 5 00 |
| 273. | அள்ளிக்கொடுக்கிறவர்! | 5 00 |
| 274. | முதிர் வயதிலும் பெலன்! | 5 00 |
| 275. | இனிய துணிக்கைகள்! | 5 00 |
| 276. | விளைந்த பலன்! | 5 00 |
| 277. | ஆசீர்வாதமும் சாபமும்! | 5 00 |
| 278. | ஒருமனப்பாடு! | 5 00 |
| 279. | தேனிட்ட பணியாரம்! | 5 00 |
| 280. | நாட்களை எண்ணும் அறிவு! | 5 00 |
| 281. | புதிய வாழ்க்கை! (தேவராஜுலு) | 5 00 |
| 282. | குற்றஞ் சாட்டுகிறீர்களா? | 5 00 |
| 283. | தாயைப்போல! | 5 00 |
| 284. | துக்கத்திலிருந்து சந்தோஷத்திற்குள்! | 5 00 |
| 285. | ஒரே தரம்! | 5 00 |
| 286. | தனிமையா? | 5 00 |
| 287. | எதிர்பாருங்கள்! | 5 00 |
| 288. | ஊழியத்தின் பாதையிலே! (ஜேஸ்மின் பால்ராஜ்) | 5 00 |
| 289. | சந்திக்க ஆயத்தப்படு! | 5 00 |
| 290. | The God of All Comfort! | 10 00 |
| 291. | The Breaker of Barriers! | 10 00 |
| 292. | To Him That overcometh! | 10 00 |
| 293. | சிகப்பு ரோஜா! (கெரோலின்ஜெயபால்) | 5 00 |
| 294. | கனிதரும் செடி! | 5 00 |
| 295. | சகோதரிகளுக்கு! (ஜேஸ்மின் பால்ராஜ்) | 5 00 |
| 296. | கிறிஸ்துவின் பொன்மொழிகள்! | 5 00 |
| 297. | அனுபவ சிறுகதைகள்! (ஜேஸ்மின் பால்ராஜ்) | 5 00 |
| 298. | Heavenly Manna For Every day! | 20 00 |

# ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை

ஏறக்குறைய 315 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!




புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

**J. சாம் ஜெபத்துரை, M. A.,**

ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024